## கருங்கல் ஓடுகள் விழுந்து குடியிருப்பாளர்கள் காயம்:

# புக்கிட் டாமன்சாரா ஆடம்பர குடியிருப்பின் கட்டுமான பணி நிறுத்தம்

கோலாலம்பூர், ஆக. 18- புக்கிட் டாமன்சாராவில் மேற்கொள்ளப்பட்டுவரும் செடார் ஆடம்பர குடியிருப்பு திட்டத்தின் கட்டுமான பணியை நிறுத்துமாறு கோலாலம்பூர் மாநகர மன்றம் (டி.பி.கே.எல்.) உத்தரவு பிறப்பித்துள்ளது.

கட்டுமான பகுதியில் இருந்து கட்டுமான பொருட்கள் விழுந்து ஓர் அண்டை வீட்டுக்காரரின் சொத்துக்கும் அவருக்கும் சேதத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தியதை தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உரிமையாளரின் சம்மதத்தோடு, பாதிக்கப்பட்ட வீட்டை குத்தகையாளர் சீர்படுத்தும் வரையில் இந்த உத்தரவு தொடர்ந்து அமலில் இருந்து வரும் என்று




டி.பி.கே.எல். நேற்று முன்தினம் ஓர் அறிக்கையில் கூறிற்று.

குத்தகையாளர் காயமடைந்த பக்கத்து வீட்டுக்காரரின் மருத்துவ செலவுகளை ஏற்றுக் கொள்வதுடன், செடார் கட்டுமான பகுதிக்கும் அண்டை வீட்டிற்கும் இடையே எல்லையில் உள்ள பாதுகாப்பு தளத்தை மேம்படுத்த வேண்டும் என்று அறிக்கை குறிப்பிட்டது.

1974 ஆம் ஆண்டு வீதி, சாக்கடை, கட்ட சட்டத்தின் 87 ஆவது பிரிவை அவர் மேற்கோள் காட்டினார்.

நேற்று முன்தினம் மாலை 5.55 மணியளவில் 600 எம்.எம்.அகலமும் 800 எம்.எம். நீளமும் உடைய பல கருங்கல் ஓடுகள் ஒரு கோபுர கொக்கெந்திரத்தால் (டவர் கிரேன்) தூக்கப்பட்டபோது அது மூன்றாவது தளத்தில் உள்ள ஒரு தடையில் மோதியது. அப்போது தான் இந்த சம்பவம் நிகழ்ந்தது.

பல ஓடுகள் பாதுகாப்பு தளத்தின் மீது விழுந்து புக்கிட் டாமன்சாரா, ஜாலான் செத்தியா காசே 6 இல் அமைந்துள்ள ஒரு வீட்டை நோக்கி பறந்து சென்றன என்று டி.பி.கே.எல். கூறிற்று.

அவை வீட்டின் கூரையை சேதப்படுத்தியதுடன் குடியிருப்பாளருக்கும் காயத்தை ஏற்படுத்தின. குத்தகையாளரும் உடனடியாக ஓடுகளை அகற்றி பழுதுபார்க்கும் பணியில் ஈடுபட்டதாக டி.பி.கே.எல். தெரிவித்தது.